சுருக்கம்

பொருட்காட்சி – தமிழ்நாடு அரசின் சார்பாக தமிழகத்தில் மாவட்ட தலைநகரங்களில் அரசுப் பொருட்காட்சி நடத்துதல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தி (பொருட்காட்சி)த் துறை

அரசு ஆணை (நிலை) எண்.322 நாள்.15.12.2011

திருவள்ளுவர் ஆண்டு 2042

கார்த்திகை 29

படிக்கப்பட்டது.

அரசு ஆணை (நிலை) எண்.233, செய்தி மற்றும் சுற்றுலா (பொருட்காட்சி)த் துறை, நாள்.24.12.1996.

-----

ஆணை:

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 15.07.2011 அன்று தலைமைச் செயலகத்தில் செய்தித்துறை தொடர்பான ஆய்வுக் கூட்டத்தில் கீழ்க்கண்ட முடிவு எடுக்கப்பட்டது.

''வேலூர், தஞ்சாவூர், திருச்சி, திருவண்ணாமலை, தூத்துக்குடி மற்றும் திருநெல்வேலியில் ஒவ்வொரு ஆண்டு அரசுப் பொருட்காட்சி நடத்தி அரசுக்கு வருவாய் அதிகரிக்கவும் அரசின் சாதனைகள் மற்றும் திட்டங்கள் விளம்பரம் செய்ய ஏதுவாக அமைத்தல்''.

2) அதன்படி மேற்குறிப்பிட்ட இடங்களில் ஒவ்வொரு ஆண்டும் அரசுப் பொருட்காட்சி நடத்தி அரசின் சாதனைகள் மற்றும் திட்டங்களை பொதுமக்களுக்கு எடுத்து செல்லும் வகையிலும், அரசுக்கு வருவாயினை அதிகரிக்கவும், தற்போது கோயம்புத்தூர், சேலம் ஆகிய இடங்களில் 60 நாட்கள் நடத்தப்படும் அரசுப் பொருட்காட்சியினை 45 நாட்கள் நடத்தவும் கருதும் இயக்குநர், செய்தி–மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9 அவர்களின் கருத்துருவின் மீது கவனமாக பரிசிலனை செய்து கீழ்க்கண்டவாறு மாவட்டங்களில் அரசுப் பொருட்காட்சியினை ஒவ்வொரு ஆண்டும் நடத்த ஆணையிடப்படுகிறது.

ரூபாய் இலட்சத்தில்

| வ.எண். | இடம் | கால அளவு | அனுமதிக்கப்படும் செலவினம் |
|---|---|---|---|
| 1 | கோயம்புத்தூர் | 45 நாட்கள் | 37.13 |
| 2 | மதுரை | 45 நாட்கள் | 32.45 |
| 3 | திருநெல்வேலி | 45 நாட்கள் | 25.25 |
| 4 | சேலம் | 45 நாட்கள் | 28.13 |
| 5 | வேலூர் | 45 நாட்கள் | 30.25 |
| 6 | திருச்சி | 45 நாட்கள் | 25.25 |
| 7 | திருவண்ணாமலை | 45 நாட்கள் | 25.25 |
| 8 | தூத்துக்குடி | 45 நாட்கள் | 25.25 |
| 9 | தஞ்சாவூர் | 45 நாட்கள் | 25.25 |

...2

3) மேலே குறிப்பிட்ட இடங்களில் ஒவ்வொரு ஆண்டும் 45 நாட்கள் அரசுப் பொருட்காட்சியினை நடத்தவும், பார்வையில் கண்ட அரசாணை பத்தி ஒன்றில் குறிப்பிட்டுள்ள சீர்திருத்தங்களை அனைத்து துறைகளும் தவறாது மேற்கொள்வதை உறுதி செய்து கொள்ளுமாறும் இயக்குநர், செய்தி–மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9 அவர்களுக்கு அறிவுறுத்தப்படுகிறது.

4) இவ்வரசாணை நிதித்துறை ஒத்திசைவுடன் அத்துறையின் அ.சா.கு.எண்.65325/ தவ,அநி(ம)செ/2011, நாள்.15.12.2011–ன்படி வெளியிடப்படுகிறது.

//ஆளுநரின் ஆணைப்படி//

மூ. இராசாராம்
அரசுச் செயலாளர்.

பெறுநர்
இயக்குநர், செய்தி–மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9.
துணை இயக்குநர் (பொருட்காட்சி), செய்தி–மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9.
கணக்கு அலுவலர்(பொருட்காட்சி), செய்தி–மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9.
மாவட்ட ஆட்சித் தலைவர்
கோயம்புத்தூர்/மதுரை/திருநெல்வேலி/சேலம்/வேலூர்/திருச்சி/
திருவண்ணாமலை/தூத்துக்குடி/தஞ்சாவூர்.
சம்பள கணக்கு அலுவலர், சென்னை–9
மாநில கணக்காய்வுத் தலைவர், சென்னை–9/18.
நகல்:-
நிதி (தமிழ் வளர்ச்சி அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை, சென்னை–9.
இருப்புக் கோப்பு/உதிரிகள்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்